**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**
**MCOP.No.33 /2023**

Deposition of witness for **RW2** for Respondent and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Ganesan | Father Name | : Ponnusamy |
| Village | : | Age | : |

**நாள்:02.04.2026.**

**எ.ம.சா.2 முதல் விசாரணை :**

இந்த வழக்கில் எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது. TN 70 Z 0295 என்ற நான்கு சக்கர வாகனம் என்னுடைய கார் ஆகும். பாகலூர் டு ஓசூர் ரோட்டில் மருந்து வாங்குவதற்காக நான் கம்பெனியில் இருந்து வந்துகொண்டிருந்தேன். நான் பாகலூர் டு ஓசூர் செல்லும் போது Big Bazar என்ற கடைக்கு முன் போகும் போது Hero Honda மோட்டார் சைக்கிள் என்னை ஓவர் டேக் செய்து முந்தி போகும் போது எதிரே வந்த Bajaj Discover வாகனம் வேகமாக வந்து எங்களது பக்கம் ஏறி சென்று இரண்டு இருசக்கர வாகனமும் மோதி கொண்டு அதில் Honda shine வாகனம் எனது காரின் வலது பக்க பம்பரில் இடித்து விட்டது. Bajaj Discover வாகனத்தை ஓட்டி வந்த சிவகுமார் தான் விபத்திற்கு காரணம். முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக சிவகுமார் காட்டப்படிருக்கிறார். சிவகுமார் நஷ்ட ஈடு கேட்டு என் மீது ஓசூர் சார்பு நீதிமன்றத்தில் MCOP.No.362/2025 தாக்கல் செய்திருக்கிறார். அந்த MCOP. 362/2025 தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதன் தீர்ப்பு நகல் **சா.சா.ஆ.Y3** ஆகும். சிவகுமாருக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனுதாரர் சுரேசுடன் பின்னால் உட்கார்ந்து குருசாந்தையா என்பவர் வந்திருக்கிறார். குருசாந்தையாவின் காயசான்றிதழில் இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி கொண்டதாக கூறப்பட்டிருக்கிறது. சிவகுமார் காயசான்றிதழில் hit by Two wheeler என்று தான்

போடப்பட்டிருக்கிறது. குற்றவழக்கில் என்னை போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதியதாக தான் கூறியிருக்கிறேன். நான் யார் மீதும் மோதவில்லை. விபத்திற்கு முழுகாரணம் இரண்டு இருசக்கர வாகனங்கள் ஆகும்.

**குறுக்கு விசாரணை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில்**

2வது எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,

சார்பு நீதிபதி,

தேன்கனிக்கோட்டை.